
# பாக்யா


இதழ்-08

சித்திரை 01 - 2007




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01.04

# பாக்யா

இதழ் -8 அறிவுப் புதையல்

சிறுவர் மாத இதழ்

ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

ஆசிரியர்
S.இராஜகுலேந்திரன்

ஆசிரியர் குழு
Mrs.M.உதயகுமாரன்
Mrs.T.தில்லையம்பலம்
Miss.S.சின்னத்துரை
Mr.S.S.ஜனகன்
Mrs.S.பாலசுப்பிரமணியம்
Mrs.T.லிங்கேஸ்வரன்
Mr.J.பிரதீபன்
Mr.M.டொமினிக்ஜீவா
Mrs.S.சிவகுமார்

நிர்வாக
ஒருங்கிணைப்பாளர்
பாக்யா

ஓவியம்
M.டொமினிக்ஜீவா
S.விஜபாலயன்

கணனி வடிவமைப்பு
அச்சுப்பதிப்பு
கரிகணன் பிறின்டேர்ஸ்,
காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.

வெளியீடு
பாக்யா காகிதாதிகள்
இல.121, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
தொ.பே:077 3053129

## பொருளடக்கம்

1) யோகக் கலையும் பரதமும் 02
2) மின்சாரம் பயன்படுத்தும் போது...... 04
3) சிறுவர் பாடல் 09
4) இராமாயணம் 12
5) கணினியில் மறைந்துள்ள பாகங்கள் 20
6) எந்த மதம் உயர்ந்தது 23
7) இலங்கையின் வரலாறு 26
8) பிறருக்குத் தெரியாத புதையல் 30
9) கணித வினா விடை 35
10) ஏமாற்றலாம் ! தண்டனை இல்லை! 37
11) தாவீது அடிகள் 42
12) பருவ காலங்கள் 45
13) வாழ்க்கை என்பது ......... 50
14) கீழைத் தேச ஓவியர்கள் 54
15) Sentence Making II 57

மாணவர்களே!
உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள்
தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகக் கலையும் பரதமும்

யோகாசனம் என்பது மனிதனுக்கு உள ஒருமைப் பாட்டினைக் கொடுத்து மனித மன உளைச்சலை நீக்கி விடுவதற்கு சிறந்த அருமருந்து என்பது நம்முன்னோர் கண்டறிந்த உண்மையும் அனுபவமும் ஆகும். இவ்யோகப் பயிற்சிக்கும் பரத ஆடல்பயிற்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன என்பது ஆய்வாளர்கள் கண்டு கொண்ட உண்மை.

யோகப் பயிற்சிகளைத் தவவாழ்க்கையில் இருந்தோரும், சித்தர்களும் மேற்கொள்ளும் போது ஏற்படும் பலனை 75% ஆவது தரக்கூடிய நன்மை பரதக் கலைக்கு உண்டு. எவ்வாறு யோகப்பயிற்சியால் மனம் ஒருமைப்படுகின்றதோ, அவ்வாறே பரதக்கலையின் பயிற்சிமூலம் மனம் ஒருமைப்பட மனஅமைதி ஏற்படும். அதற்கு ஏற்ற வகையிலேயே பரதசாஸ்திரம் அமைக்கப்பட்டுள்ளது. பரத நாட்டியத்தில் உள்ள தியானஸ்லோகம்

"ஆங்கிகம் புவனம் யஷ்ய வாசிகம்
சர்வ வாங்மயம் ஆஹார்யம்
சந்திர தாராதி தம்நுமஸ்
சாத்விகம் சிவம்"

இச்சுலோகத்தைத் தியானம் செய்யும் போது, மனதை அமைதிப்படுத்தல், உடலைத் தளர்வுநிலைக்குக் கொண்டு வருதல் என்பன முன்னெடுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் மிகமுக்கிய விடயம் யாதெனில் தியானத்தை சொல்லப்படுகின்ற முறையில் செய்வது அதுவும் நாட்டியப் பயிற்சியோடு செய்வது என்பதாகும்.

யோகாசனத்திற்கு சமமான நடனப்பயிற்சி முறைகள் எம் நாட்டியக் கலையில் உள்ளது. இதனை யோகப் பயிற்சிக்குப் பதிலாக செய்து வருவதால் ஏற்படும் விளைவுகள் மிகவும் நல்லநிலையில் உடலைப் பேண உதவும்.

சிலருக்கு அவர்கள் வாழ்கின்ற சூழல் வயது என்பன போன்ற வேறுபாட்டால் உடலைத்தளர்வாக்க யோகப்பயிற்சிகள் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படும் அப்போது அவர்களுக்கு நாம் நடனப்பயிற்சிகளைப் பயிற்றுவிக்கலாம்.

உதாரணமாக சிறுவர்கள் (8-15 வயது) இவர்களால் மனதை ஒருமுகப்படுத்தி யோகப்பயிற்சிகளை மேற்கொள்ளமுடியாது அவர்களுக்கு நாட்டியப்பயிற்சி சிறந்த களமாக அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இப்பயிற்சிகளை இரண்டு விதமாக பரீட்சித்துப் பார்த்த ஒரு நடனக்கலைஞரும், யோகக்கலைஞரும் பெறும் தளர்வுவிசை, அதனது விகிதம், ஒரே அளவாக இருந்ததாக Poly graph என்ற இயந்திரம் காட்டுகின்ற தன்மையை நாம் தொடரும் பகுதியில் நோக்கலாம். அத்தோடு நடனப் பயிற்சிக்கு பாவிக்கப்படும் இசையியல் ராகங்கள் பற்றியும் நோக்கலாம்.

திருமதி.மோகனா பாலசுப்பிரமணியம்
யா / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் பயன்படுத்தும் போது கைக்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள்

எமது நாடு மிகவேகமாக தொழில் நுட்ப மயமாகிக் கொண்டிருக்கிறதாலே மின்சாரத்தின் நுகர்வு அதிகரித் துள்ளது. அலுவல்களை விரைவாகவும் இலகுவாகவும் புரிந்து கொள்வதற்காகப் பெரும் பாலான தொழிற் சாலைகள் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கியுள்ளன.

மின்சாரத்தின் பாவனை அதிகரிக்கும் போது மின்சாரம் சார்ந்த விபத்துக்களும் இயல்பாகவே அதிகரிக்கும். எனினும் மின்சாரப் பாவனை தொடர்பான போதியளவு பாதுகாப்பு உத்திகள் பயன்படுத்தப் படுமேயாயின் அத்தகைய விபத்துக்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

மூடப்படாத பொதிகள், தீ என்பவற்றைவிட மின்சாரத்தின் மீது நாம் அதிககவனஞ் செலுத்துதல் வேண்டும். அதற்கான காரணம் மின்சாரம் எமது கண்ணுக்குப் புலனாகாததேயாகும்.

மேலும் உயிர்ச்சேதம் ஏற்படுத்தத் தக்க மின்சாரத் தாக்குதலுக்கும் உயிராபத்து ஏற்படுத்தாத மின்சாரத் தாக்குதலுக்கும் இடையே பாரிய வித்தியாசம் உண்டு. எனினும் இவ்விரு சந்தர்ப்பங்களின் போதும் ஒரேஅளவு கொண்ட பயங்கரமான ஆபத்துக்கள் நிகழவாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மின்சாரத்தினால் நிகழக்கூடிய விபத்துக்கள் இரு வகை, அவையாவன**

- நபர்கள் சார்ந்த விபத்துக்கள்
- சொத்துக்கள் சார்ந்த விபத்துக்கள் என்பன

நபர்களில் நிகழும் விபத்துக்கள் பல்வேறு வகைப்படும்

- மின்சாரத் தாக்குதலினால் நிகழும் அதிர்ச்சி காரணமாக உண்டாக்கும் விபத்துக்கள்.
- மின்சாரத்தினால் நிகழும் எரிதலால் உண்டாகும் விபத்துக்கள்.
- மின்சாரத்தால் கண்களில் உண்டாகும் விபத்து .

**மின்சாரத் தாக்குதலால் நிகழும் அதிர்ச்சி காரணமாக ஏற்படும் விபத்துக்கள்**

- இதயத்தின் அறைகள் இடையே குருதியோட்டம் தடைப்படுவதால் மரணம் சம்பவித்தல்.
- மார்புத்தசைகளில் உண்டாகும் அமுக்கம் காரணமாக சுவாசப்பையில் விரிவடைவதற்கான வாய்ப்புக்கள் தடைப்படுவதால் நிகழும் மூச்சுத் திணறல் காரணமாக மரணம் சம்பவித்தல்.
- நரம்பு இழையங்களுக்குச் சேதம் உண்டாவதனால் மரணம் சம்பவித்தல்.
- மூளையால் பொதுவாக அளிக்கப்படும் சமிக்ஞைகள் வாயிலாக நிகழும் தசைச் சுருக்கம் வன்மையான தாகவும் அழிவானதாகவும் மின்சாரத்துக்கான தூண்டற் பேறுகளைக் காட்டும் போது நிகழும் தசைச்சுருக்கம் நரம்பு இழையம் முதுகெலும்பில் நிகழும் சேதம் என்பன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மின்சாரத் தாக்குதல் காரணமாக உண்டாகும் அதிர்ச்சியால் ஏற்படும் எரிகாயங்கள்**

❖ மின்சாரம் பாய்தல் நேரடியாகவோ உடலினூடாகவே நிகழ்வதால் ஏற்படக்கூடிய எரிகாயங்கள் பல்வேறு வகைப்படும். இவற்றில் பெரும் பாலானவை உடலின் அகத்தில் ஏற்படும் எரிகாயங்களாகும். அப்போது நிலைமை மிகப் பயங்கரமான தாகலாம்.

**மின்சாரத்தால் கண்களில் உண்டாகும் விபத்துக்கள்**

❖ மின்சார வெல்டிங் வேலைகளில் ஈடுபடும் போது கண்களைக் காத்துக் கொள்ளக் கூடிய முகமூடியை அணியாது விடின் அச்சந்தர்ப்பங்களில் கழிஊதாக் கதிர்கள் காரணமாகக் கண்களில் எரிகாயங்கள் உண்டாகலாம். கண்களில் பாதுகாப்பான உபகரணங் களை அணிவதால் இத்தகைய விபத்துக்களை எளிதாகத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மின்சார விபத்துக்கள் மனிதருக்கு மட்டுமல்ல மின்சாரத்தினால் சொத்துக்களுக்கும் பாரிய சேதம் ஏற்படுத்துகிறது. இவற்றுள் தீப்பிடித்தல், வெடித்தல், என்பன பிரதானமானவை. மின்னொழுக்கு சீரற்ற செயல் என்பன காரணமாக ஏற்படும் கடுமையான வெப்பம் இதற்கான ஏதுக்களாகும் மின்சாரத் தீப்பிடித்தலுக்கு அமைப்பில் கூடுதலான வெப்பம் ஏற்படுவதற்கான காரணிகளாக அமைவது.

❖ தாங்கிக் கொள்ள முடியாத மின்சாரக் கொள்ளளவு அமைப்பிலே பாய்தல்.

❖ மின்னொழுக்கைத் தடுப்பதற்கான சாதனம் செயற்படாது விடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- போதுமான அளவு காற்றோட்டம் இல்லாதிருத்தல் என்பனவாகும்.

மின்சாரம் ஆபத்தானதாக இருப்பினும் அதனை நாம் பயன்படுத்துதல் அவசியம். எனவே இதனை நாம் கருத்தில் கொண்டு எமது சுகாதாரத்திற்கு நிகழக்கூடிய ஆபத்துக்களை இயன்றவரை குறைத்துக் கொள்ளத் தக்க உத்திகளை அறிந்து கொள்ளல் அவசியமாகும். அவையாவன.

- மின்சாரத்தால் இயங்கும் உபகரணங்களைத் தொழில் நுட்பஞ் சார்ந்த நிலையில் பாதுகாப்பாக வைத்தல்.
- அவற்றைப் பிள்ளைகள் ஏனைய உபயோகப்படுத் தாதவர்கள் ஆகியோர் நெருங்கித் தீண்டாதவாறு ஒரு பிரத்தியோக இடத்தில் வைத்தல்.
- மின்சார உபகரணங்களைப் பொருத்தும் போதும் இயங்கும் போதும் பராமரிக்கும் போதும் பாதுகாப் பான நடவடிக்கைகளைப் பின்பற்றல்.
- குறைந்த மின்சாரக் கொள்ளவினால் இயங்கும் உபகரணங்களைப் பயன்படுத்தி விபத்துக்களின் கடுமையான தன்மையைக் குறைத்துக் கொள்ளல்
- மேலும் திடீரென ஏற்படும் தீப்பிடித்தலின் போது நாம் செயற்படும் விதம் மீது கவனம் செலுத்துதல்.

| | | |
|---|---|---|
| வெப்பம் சூடாதல் நிகழும் போது ஏற்படும் தீப்பிடித்தல் | ⟶ | குளிர்ச்சியடையச் செய்தல் வெப்பத்தைக் குறைத்தல் வளியில்லாச் சூடாவதை இயன்ற வரை குறைத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| எரிபொருட்களினால் தீப்பிடித்தல் | ⟶ | எரிபொருட்களை அகற்றுதல் |
| வாயுக்களால் ஏற்படும் தீயைத்தடுத்தல் | ⟶ | வாயு விநியோகிக்கப் படு வதைத்துாண்டித்துவிடல் |

இவ்விடயங்களில் மீது கவனஞ் செலுத்துவதனால் மின்சாரத்தினால் நிகழத்தக்க சுகாதாரம் சார்ந்த பல பிரச்சனைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.


Miss.S.சின்னத்துரை
யாழ் /வைத்தீஸ்வராக் கல்லூரி

## Answer to the quiz on page 49

Fire ( 500,000 - 400,000 BC )
Wheels ( 3,500 - 3000 BC )
Abacus ( 3000 BC)
Gunpowder ( AD 1000 )
Printing Machine ( 1450 )
Telescope ( 1600 - 1700 )
Vaccination ( 1796 )
Telephone ( 1876 )
Television ( 1920s )
Internet ( 1969 )




தந்தை : உன்னை ஏன் வாத்தியார் அடிச்சார்?
மகன் : ஒரு பையனோட ரப்பரைத் திருடிட்டேன்னு அடிச்சார்ப்பா
தந்தை : அடே திருடுறது கெட்ட பழக்கமடா இனிமே எங்கிட்ட கேளு நான் ஆபிஸிலேர்ந்து எடுத்துட்டு வந்து தாறேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாடல்

1. **இராகம் : காபி**
**தாளம் : ஏகம் (திஸ்ரநடை)**
**பாடல் : "கண்ணன் புரிந்தலீலை"**

இப்பாடலின் இசை இலகுவான மெட்டில் அபிநயப் பாடலாக அமைகின்றது. இப்பாடல் கண்ணனின் குறும்புச் செயல்களை வர்ணிப்பதாக அமைந்துள்ளது. கண்ணனின் குறும்புகளாவன வெண்ணெயை திருடி உண்ணுதல், இடுப்பில் குடத்துடன் செல்லும் பெண்களின் நடுவே சென்று குதிப்பான். பட்சணங்களை கள்ளத்தனமாக கண்டுபிடித்து உண்பான். வண்ண வண்ண மலர்களையெல்லாம் பறித்து எறிந்து விளையாடுவான்.

2. **பாடல் : "ஒளிபடைத்த கண்ணினாய்"**
**தாளம் : ஆதி**
**பாடியவர் : மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

இப்பாடல் ஒரு மனிதனால் வளர்க்கப்பட வேண்டிய நற் பண்புகளையும் தவிர்க்க வேண்டிய தீயகுணங் களையும் பற்றி விளக்குகின்றது. இவ்வாறு ஒழுகுவதனால் உலகில் ஒருவன் நற்பிரஜையாக வாழ முடியும். என்பதனை இப்பாடல் மூலம் பாரதியார் தெளிவாக விளக்கியுள்ளார்.

3. **நாட்டார்பாடல் : "மலைநாட்டு சீமையுங்க"**
**தாளம் : ஏகம் (திஸ்ரநடை)**

மலை நாட்டின் வளங்கள், வாழ்க்கை முறை, ஒற்றுமை, தொழிலாளர் ஓயாது படும் கஷ்ரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை வர்ணிப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. மலைநாட்டில் தேயிலை கொய்யும் போது அச்சந்தர்ப்பத்தில் இப்பாடல் பாடப்படுகிறது.

**4. கல்லூரி கீதம்**

கல்லூரிக் கீதத்தினை பாடசாலை கீதம் எனவும் அழைப்பார். ஒவ்வொரு கல்லூரிகளிற்கும் அப்பாடசாலையின் பெருமையை விளக்கும் வகையில் கல்லூரி கீதம் இயற்றப்பட்டு இசையமைக்கப் பட்டிருக்கும். கல்லூரிக் கீதம் பாடசாலை ஆரம்பிக்கும் போதும் பாடசாலையில் நடைபெறும் ஒவ்வொரு விழாக்களின் போதும் பாடசாலை இல்லமெய்வன்மைப் போட்டி போன்ற சந்தர்ப்பங்களில் பாடப்படுகிறது.

**1. வாத்திய இசையை இரசித்தல் (மிருதங்கம், நாதஸ்வரம், தவில்)**

தவில், மிருதங்கம் இரண்டும் தோற்கருவியாகும் அதோடு தாளவாத்தியமுமாகும். மிருத்ங்கம் இசை, நடனக்கச்சேரிகளில் பிரதான பக்கவாத்தியமாகத் திகழும் லயவாத்தியமாகும்.

நாதஸ்வரம் ஒரு மங்களவாத்தியமும் ஒற்காற்று வாத்தியமுமாகும் தவில், நாதஸ்வரம் ஆகிய வாத்தியங்கள் ஆலயங்களில் பூஜைக்காலங்களிலும், மங்களகரமான திருமணவீடு, பூப்புனித நீராட்டுவிழா போன்ற வைபவங்களிலும் வாசிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. அலகு : ஆக்கத்திறனை வளர்த்தல்**

**உபஅலகு : புத்தளிப்புக் கருவி**

சூழலில் கிடைக்கும் எளிமையான பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படும் கருவிகள் புத்தளிப்புக் கருவிகள் ஆகும். இக் கருவிகளை ஆக்குவதற்குப்பயன் படும் சூழலில் கிடைக்கும் பொருட்களாவன தகரடப்பா, சோடாப்போத்தல், மூங்கில் தடிகள், கம்பி, பானைமூடி, சோடாமூடி, தடித்தபேப்பர்.

**3. அலகு : நாட்டார் பாடல்**

**உபஅலகு : "ஆற்றிலே தண்ணீர்"**

**தாளம் : ஏகம் (திஸ்ரநடை)**

இப்பாடல் நாட்டார்பாடலில் விவசாயப்பாடல் வகையை சேர்ந்ததாகும் குறித்த இப்பாடல் நாற்று நடும்போது பாடப்படுகிறது. பாடலின் தாளநடை திஸ்ரநடையாகும்.

**இசைக்கலைமணி சங்கீத கலா வித்தகர்**
**திருமதி. சக்திதேவி சிவகுமார், யாழ் இந்துமகளிர் கல்லூரி.**



**மனைவி : வரதட்சனை கொடுத்தா தண்டனைன்னு சொல்லுறாங்க ஆனால் நம்ப கல்யாணத்தின் போது இப்படி எல்லாம் தண்டனை கிடையாது**

**கணவன் : நாம கல்யாணம் பண்ணிக்கொண்டதே பெரிய தண்டனை ஆச்சு!**

**44 ஆம் பக்க ஆறு வித்தியாசங்களுக்கான விடைகள்**

| | |
|---|---|
| 01. கால் | 04. பிரம்பு |
| 02. விளக்கு | 05. பரல் மூடி |
| 03. நீர் | 06. மாட்டின் மணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாயணம்

இராமாயணம் சென்ற இதழ் தொடர்....

"ஐயோ! என் தந்தை இறந்து விட்டாரா? எப்படி அவர் இறந்தார்? இறக்கும் போது என்ன சொன்னார்?"

"இராமா! என்னை விட்டுப் போய் விட்டாயா?" என்று கதறினார். அவர் மூச்சு நின்று விட்டது.

"தந்தை இறக்கும் போது அண்ணனும் இல்லையா? என்ன தான் இங்கு நடந்தது? எதையும் மறைக்காமல் சொல்லுங்கள்." நடந்ததை எல்லாம் விளக்கமாகச் சொன்னாள் அவள்.

"ஐயோ! நான் என்ன செய்வேன்? என் தாய் கொடிய பாவம் செய்து விட்டாளே. என்னைப் பெரும் பழிக்கு ஆளாக்கி விட்டாளே. இந்தப் பழியை எப்படி போக்குவேன்" என்று அழுது புலம்பினான்.

எரித்து விடுவது போலக் கோபத்துடன் தாயைப் பார்த்தான்.

"நீ என் தாயே அல்ல. கொடிய பகையாகவே உன்னைக் கருதுகிறேன். அண்ணனைக் காட்டிற்கு அனுப்ப எப்படி உனக்கு உள்ளம் வந்தது? அவர் மீது நான் உயிரையே வைத்துக் உள்ளேனே. அது உனக்குத் தெரியாதா? இரக்கமே இல்லாமல் என் தந்தையைக் கொன்றுவிட்டாயே. பாவி! உன் முகத்தில் விழிப்பதும் பாவம்" என்று கத்தினான்.

கதறி அழுதபடி கோசலையின் மாளிகைக்கு ஓடினான். அவளுடைய திருவடிகளில் விழுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசலை அவனைப் பார்த்து "பரதா! என்னையும் சுமத்திரையையும் அழைத்துச் சென்ற இராமனிடம் விட்டுவிடு நாங்கள் காட்டில் அவனுடனே இருக்கிறோம். நீயே இந்த நாட்டை ஆண்டு மகிச்சியாக இரு" என்றாள்.

வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போலத் துடித்தான் அவன். வசிஷ்டரிடம் வந்தான் அவன்.

"இராமரை மீண்டும் இங்கு அழைத்து வர வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? சொல்லுங்கள்" என்று கேட்டான்.

**ஆயிரம் இராமனுக்கு இணை**

"பரதா! முதலில் உன் தந்தையின் இறுதிக் கடன்களை நிறைவேற்று பிறகு காட்டிற்குச் சென்று இராமனை அழைத்து வரலாம்" என்றார் வசிஷ்ட முனிவர்.

அதன்படியே தசரதனின் உடலுக்கு வைதீக முறைப்படி தீ மூட்டப்பட்டது.

'இராமனை அழைத்து வர பரதன் காட்டிற்குச் செல்கிறான். தாய்மார்கள் மூவரும் உடன் செல்கின்றனர். பெரிய படை துணைக்குச் செல்கிறது.' இந்தச் செய்தியை அறிந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மக்கள் வெள்ளம் தொடர்ந்து வர பரதன் புறப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைக் கரையில் இருந்தான் குகன். பெரிய படை புழுதி ஏற்படுத்திக் கொண்டு வருவதைப் பார்த்தான். இராமருக்குத் தீங்கு செய்ய பரதன் படையுடன் வருகிறான். நண்பனுக்காக உயிரையும் விடுவேன். என்னைக் கொன்ற பின்தான் பரதனால் கங்கையைக் கடக்க முடியும் என்று உறுதி பூண்டான்.

கோபத்துடன் அவன் பரதனை எதிர்க்கத் தயார் ஆனான். அந்தப் படை அவன் அருகில் வந்தது.

துறவுக் கோலத்தில் கண்ணீர் வழிய நின்ற பரதனைக் கண்டான். தன் எண்ணம் தவறு என்பதை உணர்ந்தான் அவன். பரதனைச் சந்திக்கச் சென்றான்.

"இராமரின் நண்பன். வேடுவர் தலைவன். பெயர் குகன்" என்று அவனைப் பரதனிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள். குகனை வணங்கிய பரதன் "இராமரை அழைத்துச் செல்ல வந்து உள்ளேன். அவர் இல்லாமல் எங்களுக்கு வாழ்வு இல்லை" என்று அழுதான்.

'ஆ! இவரைத் தவறாக நினைத்து விட்டோமே. இராமரின் உடன் பிறந்தவர்கள் தவறு செய்வார்களா' என்று வருந்தினான் குகன். பரதனைப் பார்த்து உள்ளம் நெகிழ்ந்தான். அவன் "ஆயிரம் இராமர்கள் உனக்கு இணையாக மாட்டார்கள்" என்று பாராட்டினான்.

அவனுடைய உதவியால் பரதனும் மற்றவர்களும் கங்கை ஆற்றைக்கடந்தார்கள். சித்திர கூட மலையை அடைந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினைத் தொலைவில் நிறுத்தினான் பரதன் சத்ருக்கனனுடன் சென்று இராமனின் திருவடிகளில் விழுந்து வணங்கினான்.

"அண்ணா! உங்கள் துன்பத்திற்கு நான் காரணமாகி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று அழுது புலம்பினான். தன் கைகளால் அவனை அன்புடன் தூக்கினான் இராமன். அப்படியே தழுவிக் கொண்டான்.

"தம்பி! என்ன நிகழ்ந்தது? ஏன் இப்படி அழுது புலம்புகிறாய்? தந்தையை விட்டு எதற்காக இங்கே வந்தாய்? என்று கேட்டான். "அண்ணா! அதை எப்படிச் சொல்வேன்? தங்கள் பிரிவைத் தாங்க மாட்டாத தந்தை இறந்து விட்டார்" என்று அழுதான்.

"ஐயோ! தந்தை இறந்து விட்டாரா?" என்று கலங்கினான் இராமன். அப்படியே மயக்கம் அடைந்தான். அருகிலிருந்த சீதை அவன் மயக்கத்தைத் தெளிவித்தாள். அங்கேயே தங்கினான் பரதன். மறுநாள் தன் எண்ணத்தை இராமனிடம் தெரிவித்தான்.

அண்ணா! நீங்கள் மீண்டும் அயோத்தி வர வேண்டும். தந்தையின் விருப்பப்படி மணிமுடி சூட வேண்டும். நாட்டை ஆள வேண்டும். எங்கள் எல்லோருடைய விருப்பமும் இதுதான். எங்கள் வேண்டுகோளை மறுக்காதீர்கள்" என்று வேண்டினான்.

"தம்பி! தந்தையின் கட்டளையை நான் மீற மாட்டேன். பதினான்கு ஆண்டுகள் கழித்துத்தான் நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்புவேன். இது உறுதி. நாடு திரும்பி நீ அரசனாகி ஆட்சி நடத்து" என்றான் இராமன். "நீங்கள் இல்லாமல் நாங்கள் யாரும் நாடு திரும்பமாட்டேம். இங்கேயே உங்களுடன் தங்கி விடுகிறோம்" என்றான் பரதன்.

"தம்பி! நான் வாக்குத் தவற மாட்டேன். என்னை வற்புறுத்துவதால் எந்தப் பயனும் இல்லை" என்று உறுதியுடன் சொன்னான் இராமன். அங்கிருந்த முனிவர்கள் "பரதா! இராமன் சொற்களை ஏற்று நட" என்றார்கள்.

வேறு வழி இல்லை என்பதை உணர்ந்தான் பரதன். "அண்ணா! உங்களுக்கு உரிய அரியணையில் நான் அமரமாட்டேன். ஆட்சி செய்ய கட்டளை இட்டீர்கள். அதை மீற மாட்டேன். உங்களின் பிரதிநிதியாக இருந்து ஆட்சிசெய்வேன். உங்கள் நினைவாகப் பாதுகைகளைத் தாருங்கள் உங்களுக்குப் பதில்அவையே நாட்டை ஆட்சி செய்யும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் நீங்கள் வர வேண்டும். ஆட்சியை ஏற்க வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் தீயில் பாய்ந்து உயிர் விடுவேன். இது உறுதி" என்றான். தன் திருவடிகளில் அணிந்து இருந்த பாதுகைகளைக் கழற்றினான் இராமன். அந்தப் பாதுகைகளை வணங்கினான் பரதன். அவற்றைத் தன் தலையின் மேல் சுமந்தான். கண்களில் கண்ணீர் மல்க அயோத்தி திரும்பினான். இராமனின் பாதுகைகளை அரியணையில் வைத்தான். இராமனின் பெயராலேயே ஆளத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகருக்கு வெளியே சிறு குடில் அமைத்தான். துறவி போல அங்கேயே தங்கி இருந்தான். இராமன் திரும்பும் நாளை எண்ணிக் காலத்தைக் கழித்து வந்தான். அங்கே இராமனும் இலக்குவனும் சீதையும் சித்திர கூடத்தைப் விட்டுப் புறப்பட்டார்கள். அடர்ந்த காட்டு வழியே சென்றார்கள். ஆங்காங்கே இருந்த முனிவர்களை வணங்கி வாழ்த்துக்களைப் பெற்றார்கள்.

தன் இருப்பிடம் வந்த அவர்களை அகத்திய முனிவர் வரவேற்றார். அங்கே சிறிது காலம் தங்கினார்கள். அவர்களைப் பார்த்து அகத்தியர் "கோதாவரி ஆற்றங்கரையில் பஞ்சவடி என்ற இடம் உள்ளது. அங்கே தங்குங்கள்" என்று அறிவுரை சொன்னார்.

அதன்படியே அவர்கள் பஞ்சவடியை அடைந்தனர். அங்கே மான்கள் துள்ளி விளையாடின. குயில்கள் கூவின. இயற்கை அழகு கொஞ்சும் அந்த இடம் அவர்களைக் கவர்ந்தது. அங்கே அவர்கள் குடில் அமைத்தார்கள். மகிழ்ச்சியாகத் தங்கி இருந்தார்கள்.

தொடரும்.....



பஸ் பயணி : சீக்கிரம் விசில் குடுய்யா

கண்டக்டர் : விசிலை உங்கிட்ட குடுத்திட்டு நான் என்னையா பண்ணுவேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கிலப் பழமொழிகளும் இணையான தமிழ்ப் பழமொழிகளும்

01. A rotten case abides no handing.
அழுகிய முட்டையை அடைகாக்க வேண்டுமா?
02. Better wear out than rust out.
துருப்பிடிப்பதை விடத் தேய்ந்து போவது மேல்.
03. Ability is of little account without opportunity.
வாய்ப்பில்லாத திறமைக்கு வருமா பெருமை?
04. Do well and right, and let the whole world sink
உலகமே மூழ்கினும் நல்லதைச் சரியாகச் செய்.
05. Adversity makes a man wise, not rich
துன்பம் ஒருவனை செல்வந்தனாக்காவிடினும் அறிவாளி ஆக்கும்.
06. They are able because they think they are able.
(அ) உயர்வாகக் கருதினால் உயர்ந்திட முடியும்.
(ஆ) திறமைசாலி என நினைத்தால் திறமைசாலி ஆகலாம்.
07. Good counsel has no price.
நல்ல அறிவுரை விலைமதிப்பற்றது.
08. Do what you can with what you have where you are
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
09. When the cat's away, the mice will play
(அ) பூனை புறம்போனால் எலி கூத்தாடும்
(ஆ) தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டன்.
10. Some are born great, some achieve greatness and so have gretness thrust upon them.
சிலர் பெருமை பிறப்பால் வரும், சிலர் பெருமை சாதனையால் வரும் சிலர் பெருமை பிறர் திணிப்பால் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கணினியில் மறைந்துள்ள பாகங்கள்




ஒட்டுமொத்த கணினியைப் பார்க்கும் போது இவ்வாறு தெரிந்தாலும், main box எனக்குறிப்பிடப்பட்டுள்ள கணினியின் பிரதான பாகத்தினுள் பல உதிரிப்பாகங்கள் மறைந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை இப்போது பார்ப்போம்.

---

இது motherboard அல்லது தாய்ப் பலகை எனப்படுகிறது. இந்தப் பலகை யிலேயே கணினியின் ஏனைய உதிரிப் பாகங்கள் இணைக்கப்படுகின்றன.



---




Processor எனப்படுகின்ற இந்த அலகே கணினியின் மூளை ஆகும். இதுவே கூட்டல், கழித்தல் பெருக்கல், பிரித்தல் முதலிய கணித வேலைகளையும், இரு இலக்கங்களை ஒப்பிடுதல் முதலிய தர்க்க வேலைகளையும், கணனியின் ஏனைய பாகங்களைக் கட்டுப்படுத்துகின்ற வேலையையும் செய்கிறது.

---




இது RAM எனப்படுகின்ற பிரதான நினைவகமாகும். Keyboard, mouse முதலிய உள்ளீட்டுக் கருவிகளினால் வரும் தரவுகள் முதலில் சென்றடைவதும் இவ்விடத்தில்தான்; Monitor, printer முதலிய வெளியீட்டுக் கருவிகளுக்கு வரும் தகவல்களும் இவ்விடத்தி லிருந்துதான் வருகிறது. இதிலுள்ள தரவுகளும் தகவல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியை நிறுத்தியவுடன் அழிந்துவிடும். அதாவது, கணினி இயங்கிக் கொண்டிருக்கும போது மட்டுமே இதில் தரவுகளும் தகவல்களும் இருக்கும்.


---



இது hard disk drive எனப்படுகிறது. இங்கு பெருமளவான தரவுகளும் தகவல்களும் சேமிக்கப்பகிறது. மேற்கூறப்பட்ட பிரதான நினைவகம் போலல்லாது கணனியை நிறுத்திய பின்னரும் இதிலுள்ள தரவுகளும் தகவல்களும் நிலைத்திருக்கும்.

---

Floppy disk drive எனப்படும் இந்தப் பாகமே நாம் நன்கு அறிந்த floppy disk இல் தரவுகளையும் தகவல்களையும் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் பயன்படுகின்றது.



---



இது CD ROM drive எனப்படுகிறது. CDக்களில் இருந்து தரவுகளையும் தகவல்களையும் வாசிப்பதற்கு இது பயன்படுகின்றது.

இதுபோலவே CD Writerஆனது CDக்களில் தரவுகளையும் தகவல்களையும் எழுதுவதற்கு பயன்படுகின்றது. DVD ROM Driveஆனது DVDக்களில் இருந்து தரவுகளையும் தகவல்களையும் வாசிப்பதற்கு பயன்படுகின்றது. DVD Writerஆனது DVDக்களில் தரவுகளையும் தகவல்களையும் எழுதுவதற்கு பயன்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவை ribbon cable கள் எனப்படுகின்றன. இவை mother board உடன் நேரடியாகப் பொருத்த முடியாத hard disk drive, floppy disk drive, CD ROM drive, CD Writer, DVD ROM Drive, DVD Writer முதலிய பாகங்களை motherboard உடன்இணைப்பதற்குப் பயன் படுகின்றன.

---



Monitor, speaker முதலிய புறத்திய உறுப்புக்களை motherboard உடன் இணைப்பதற்கு, motherboardஉடன் மேற்காட்டப்பட்டது போன்ற dauter board (மகள் பலகை) ஒன்றை இணைக்க வேண்டும்.

---




CDக்களில் இருந்து தரவுகளையும் தகவல்களையும் வாசிப்பதற்கு இது பயன்படுகின்றது.

இது கணனியின் அனைத்துப் பாகங்களுக்கும் மின்சாரத்தை வினியோகிக்கும் power supply எனப்படுகின்ற அலகாகும்.

---

இது casing எனப்படுகின்ற அனைத்துப் பாகங்களையும் மூடியிருக்கின்ற பாகமாகும்.



---

ஜெ.பிரதீபன், B.Sc(Hons), Lecturer in Information Technology,
Sri Lanka Institute of Advanced Technological Education.

இந்தத் தொடரானது பத்துத்தொடக்கம் பதினைந்து வயதுக்குஉட்பட்ட மாணவரை கருத்திற்கொண்டு எழுதப்பட்டாலும் கணனி பற்றிய அறிமுகம் தேவையானோர் அனைவரும் இத்தொடரைத் தொடர்ந்து வாசித்துப் பயன்பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த மதம் உயர்ந்தது?

அந்த ஆண்டு பருத்தி விளைச்சல் முடிந்தது. விளைந்த பருத்தியை விற்பதற்காக பக்கத்து ஊர்ச் சந்தைக்கு உழவர்கள் கூட்டமாகச் சென்றுகொண்டிருந்தனர்.

சைவர், வைணவர், புத்தர் போன்ற பல சமயத்தினர் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். வழியில் இருந்த பெரிய ஆலமர நிழலில் அவர்கள் அனைவரும் இளைப்பாறுவதற்காக அமர்ந்தனர்.

"யார் பின்பற்றுவது உண்மையான சமயம்" என்று பேசத் தொடங்கினார்கள். "சைவசமயமே உண்மையான சமயம் சிவபெருமானே எல்லாக் கவுளுக்கும் மேலானவர்" என்றார் சைவர் ஒருவர். இல்லவே இல்லை திருமால்தான் பெரியவர். வைணவமே உண்மையான சமயம் என்று உரக்கச் சொன்னார் வைணவர்.

"புத்தரை மறந்து நீங்கள் இருவரும் வீண் பேச்சில் இறங்கியிருக்கின்றீர்கள்" என்றார் புத்த சமயத்தவர் ஒருவர்.

அவ்வளவுதான் அங்கேயிருந்தவர்கள் பல பிரிவாகப் பிரிந்தனர். தங்கள் சமயம்தான் உயர்ந்தது என்பதை நிலைநாட்ட ஒருவரை யொருவர் அழித்துக்கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்த பெரியவர் ஒருவர் "எது உண்மையான மதம் என்று உங்களுக்குத் தெரிய வேண்டும் அவ்வளவுதானே" என்றார்.

"ஆமாம்" உன்று எல்லோரும் சொன்னார்கள்.

"நீங்கள் கொண்டுவந்திருக்கும் பருத்தியை விற்பதற்காக சந்தைக்கு எடுத்துச் செல்கிறீர்கள் அங்கு யாருடைய பருத்தி அதிக விலைக்குப் போகும்? சைவருடையதா வைணவருடையதா, புத்த மதத்தவருடையதா ? உங்களில் யாராவது சொல்லுங்கள்" என்று கேட்டார் அவர்.

யாருடைய பருத்தி நல்ல தரமுடையதாக உள்ளது அது அதிக விலைக்குப் போகும். சந்தையில் யார் நிலத்தில் விளைந்தது என்று பார்த்து யாரும் வாங்குவதில்லை. என்று பதில் தந்தார் ஒருவர். "அதே போலத்தான் கடவுளும். நீங்கள் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றுங்கள். யார் நல்ல வாழ்க்கை வாழ்கின்றாரோ அவரே கடவுளுக்கு மிகவும் வேண்டியவர்.

கடவுளைப் பொறுத்வரையில் எல்லா மதமும் ஒன்றுதான். எப்படிப் பருத்தி வாங்குபவன் எந்த நிலத்தில் விளைந்தது என்று பார்ப்பதில்லையோ அதுபோல இனிமேலாவது மதத்தின் பெயரால் சண்டை போடாதீர்கள் என்றார் பெரியவர். நல்லறிவு பெற்ற அவர்கள் அவரை வணங்கினார்கள். ஒற்றுமையுடன் சந்தைக்குப் புறப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வரலாறு

ஸ்ரீ மகாபோதி விருட்சக் கிளை நாட்டப்பட்ட பின்பு இலங்கையில் பிக்குனி சாசனம் ஸ்தாபிக்கப்பட்டது இலங்கையில் முதலாவது பிக்குனியான அனுலாதேவி கௌரவிக்கப்பட்டார். இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பிக்குனி சாசனத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு.

* அனுலாதேவியினால் ஆரம்பிக்கப்பட்ட பிக்குனி சாசனம் இந் நாட்டில் மிகவிரைவாக வியாபித்தமை.
* இலங்கைப் பிக்குனிமார் சீனாவை அடைந்து பிக்குனி சாசனத்தை நிறுவியதாக வரலாற்று மூலதாரங்கல் காணப்படுகின்றது.
* அரச வம்சத்தை சார்ந்த இளவரசிகள் பலர் பிக்குனி சாசனத்தில் சேர்ந்தமை.
* அக் காலத்தில் சுமார் இருபதினாயிரம் பிக்குனிமார் இலங்கையில் இருந்ததாக தீபவம்சம் கூறுகின்றது.

இவ்வாறு மகிந்ததேரர் சங்கமித்தை ஆகிய இருவரும் சேர்ந்து தேவநம்பிய தீஸனின் ஆதரவைப் பெற்று பௌத்தமதத்தை மேலும் இலங்கையில் வளர்க்க முடிந்தது . இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பெரும்பாலான மக்கள் பௌத்த மதத்தை தழுவிக் கொண்டனர் என வரலாறுகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பௌத்த சமயம் பரவியதால் ஏற்பட்ட சமூக கலாசார மாற்றங்கள்**

மக்கள் வாழ்க்கையின் அனைத்துத் துறைகள் மீதும் பௌத்த சமயமானது செல்வாக்கினை செலுத்தியது. பௌத்த சமயச் செல்வாக்கினால் மக்களது வாழ்க்கை எளிமையானதாகவும், முறை சார்ந்ததாகவும் அமைந்தது. தயவு, கருணை, இரக்கம் போன்ற பண்புகள் விருத்தியடைய பௌத்த சமயம் பெரிதும் உதவியது. பௌத்தர்கள் பஞ்சசீலங்களையும் அட்டசீலங்களையும் கடைப் பிடித்தாவாறு சமயம் சார்ந்த வாழ்க்கையே வாழ்ந்தனர்.

அரசர் கீர்த்தி சிறிமேவன் காலத்தில் புனித தந்ததாது. இந் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இதனால் அரசுரிமை உறுதிப்படுத்தும் சின்னமாக இது கொள்ளப் பட்டது. சங்கமித்தையோடு இலங்கைக்கு வந்தவர்கள் பல்வேறு தொழில் நுட்பங்களை அறிந்திருந்தனர். இதனால் இங்கு பௌத்த மதத்தினூடாக பின்வரும் தொழில்களை மக்கள் பின்பற்றினர்.

- ஆடை நெய்தல்.
- மட்பாண்டங்களை வனைதல்.
- தச்சுவேலை செய்தல்.
- மாணிக்கம் பட்டை தீட்டுதல்.
- உலோக வேலை செய்தல்.

பௌத்த சமயத்தின் செல்வாக்கினால் சிங்கள மொழியும் இலக்கியமும் விருத்தியடைந்தது பிரஸ்மி எழுத்துக்கள் சிங்கள நெடுங்கணக்கின் தோற்றத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துக்களாக அமைந்தன. பாஞ்சாலைகள் நாட்டின் கல்வி நிலையங்களாக திகழ்ந்தன. மகாவிகாரை அபயகிரி விகாரை என்பன வெளிநாடுகளிலும் கல்வி நிலையமாக கணிக்கப்பட்டன.

இலக்கியத்துறை விருத்தியடைந்தது போலவே கட்டடக் கலைத்துறையும் விருத்தியடைந்தது. இதன் காரணமாக நிலையான கட்டடங்கள் நிர்மானிக்கப்படும் மரபு தோன்றியது. அப்போதைய கட்டடங்களுள் சமயம் சார்ந்த கட்டடங்கள் முக்கியமானவை அவையாவன தூபராம, ருவன்வலிசாய, மிடுஸ்வட்டிய, அபயகிரி, ஜேதவனராம முதலியன பிரசித்தி வாய்ந்த தூபிகளாகும்.

பின்பு சிற்பக் கலைகள், ஓவியக்கலைகளும், பிரசித்தி பெற்றுக் காணப்பட்டன. ஓவியங்களில் அனுராதபுரக் காலத்தில் சிகிரியா ஓவியம் பிரசித்தி பெற்றுக் காணப்பட்டன. பொலநறுவை கால ஓவியமாக இலங்கதிலக ஓவியமும். திசங்க சிலைகூட ஓவியம் இன்று எச்சமாக உள்ளது.

ஓவியக்கலை போன்று இலக்கியமும் செழுமை யடைந்து காணப்பட்டது. அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் சில

| **செய்யுள் சார்ந்த காவியம்** | **உரைநடை சார்ந்த காவியம்** |
|---|---|
| முவதெச்தாவக | தம்பியா அட்டுவா, ஹட்டப்பதய |
| சசதாகவ | சிங்க வளத்த விளிச |
| கவிசிலுமின | அமாவத்துற, புத்சரள |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச நிருவாக நடவடிக்கைகளிலும் புத்தசமய போதனைகளின் செல்வாக்கை காணலாம். அநேகமான அரச நிருவாக நடவடிக்கைகளிற் பிக்குகளின் ஆலோசனையையும் ஆசிர்வாதத்தினையும் பெற்று பின்பற்றுதல் அரசர்களின் வழக்கமாக இருந்ததாக வரலாறு கூறுகின்றது. மன்னர்கள் பௌத்த மதத்திற்கு தளராது ஆதரவு கொடுத்து வந்தனர். இவ்வாறு அரச ஆதரவு கிடைத்தமையினால் பௌத்த சமயம் நாடு முழுவதும் பரவியதுடன் பௌத்த கலாசாரம் இந் நாட்டின் கலாசாரம் எனும் நிலையை எய்தியது.

த.லிங்கேஸ்வரன்
இராமநாதன் கல்லூரி.

---










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறர்க்குத் தெரியாத புதையல்

அரசவைக்குக் கழைக் கூத்தாடி ஒருவன் வந்தான். கயிற்றின் மேல் நின்றபடியே பல வித்தைகளைச் செய்துகாட்டினான். அவையில் இருந்தவர்கள் அவன் திறமைகளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். கழைக் கூத்து முடிந்தது. இரண்டு பொற் காசுகளை அவனுக்குப் பரிசாக தந்தான் அரசன்.



மாட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு மகிழ்ச்சியுடன் தன் ஊர்புறப்பட்டான் கழைக்கூத்தாடி. வழியில் இருந்த காடுவழியாகச் சென்றுகொண்டிருந்தான். தண்ணீர் வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிண்று ஒன்று தெரிந்தது.

வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்தக் கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைக் கிணற்றுக்குள் விட்டு தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.

கிணற்றுக்குள் இருந்து "யார் இங்கே தண்ணீர் எடுப்பது?" என்று பயங்கரமான குரல் கேட்டது. அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அவன் நடுங்கும் குரலில் ஐயா நான் கழைக்கூத்தாடி தண்ணீர் குடிபதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் தெரியமாட்டேன்" என்றது அந்தக்குரல்.

" மந்திரக் கிணறா? விரும்பியதை எல்லாம் தருமா? என்று வியப்புடனே கேட்டான் அவன். உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு. உன் விருப்பம் எதுவானாலும் கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக்கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்" என்றது அந்தக் குரல்.

என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்ற எண்ணத்தில் ஒரு பொற்காசைக் கிணற்றுக்குள் போட்டான். "விலை உயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்" என்றான் அவன். ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி வழிந்தது. இதைப் பார்த்து வியப்பு அடைந்தான் அவன்.

"ஆ! ஏராளமான செல்வம் கிடைத்துவிட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான்தான்" என்று மகிழ்ச்சியுடன் அந்த வண்டியில் அமர்ந்தான். "ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே. வழியில் திருடர்கள் இருப்பார்களே. அவர்கள் அந்த நகைகளையும் பொற்காசுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாக்யா இசைப் பயிலகம்

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு.

இலங்கையின் தலைசிறந்த ஆசிரியர்கள் மூலம்
இசை,இசைவாத்திய வகுப்புக்களுடன்
ஓவியப் பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.
பழக விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**வாய்பாட்டும் பண்ணிசையும் -**
செல்வி.செ.வற்சலா (இசைக்கலைமாணி)

**வயலின் -**
திரு.அ.ஜெயராமன் (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)

**மிருதங்கம் -**
திரு.வே.சிவமூர்த்தி (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)

**புல்லாங்குழல் -**
திரு.கு.நக்கீரன் (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)

**ஓகன் -**
திரு.ந.செல்வச்சந்திரன் (இசைக்கலைமணி, R.D.P.A)

**சித்திரம் -**
திரு.சு.விஜயாலயன் (இலங்கையின் முன்னணிக்கலைஞர்)

**சித்திரக்கலை, சிற்பக்கலை வகுப்புகளும் நடைபெறுகின்றன.**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**பாக்யா காகிதாதிகள்**
**இல.121,கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.**
**தொடர்பு: 077 3053129**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வது" என்று சிந்தித்தான் அவன். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது. கிணற்றருகே வந்த அவன் தன்னிடம் இருந்த இரண்டாவது பொற்காசையும் அதற்குள் போட்டான்.

"உனக்கு என்ன வேண்டும்"? என்று உள்ளிருந்து குரல் கேட்டது. "வண்டியில் இருக்கும் நகைகளும் பொற்காசு களும் என் கண்களுக்கு மட்டும் தெரிய வேண்டும். பிறர் கண்களுக்குத் தெரியக்கூடாது" என்றான் அவன். "அப்படியே ஆகட்டும்" என்று குரல் வந்தது. வண்டியை ஓட்டிக் கொண்டு புறப்பட்டான் அவன். எதிரில் திருடர்கள் சிலர் வந்தனர். அவர்கள் கண்களுக்கு வண்டியில் இருந்த நகைகளும் பொற்காசுகளும் தெரியவில்லை.

தன் அறிவுக்கூர்மையை மெச்சிக்கொண்டான் அவன். மகிழ்ச்சியுடன் வீட்டை அடைந்தான்.. வண்டியில் இருந்தபடியே தன் மனைவிக்குக் குரல் கொடுத்தான் அவன். மனைவியும் வெளியே வந்தாள்.

"இனி நாமோ நம் பரம்பரையோ வறுமையில் வாட வேண்டாம். அரசரைப் போலச் செல்வச் செழிப்புடன் வாழலாம். வண்டியில் விலை உயர்ந்த பொருள்கள் என்னென்ன கொண்டு வந்துள்ளேன் பார்" என்று மகிர்ச்சியுடன் சொன்னான். வண்டி காலியாக இருப்பதைப் பார்த்து அவன் மனைவி திகைத்தாள். "என்னங்க! வண்டியில் விலை உயர்ந்த பொருட்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். எந்தப் பொருளும் இல்லையே" என்றாள். அவன் கண்களுக்கு வண்டியில் ஏராளமான பொற்காசுகளும் இருப்பது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியைப் பார்த்து "வண்டியை நன்காகப் பார்" என்றான். அதற்கு அவள் "நன்றாகப் பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன்" என்றாள். அவனுக்கு தான் கேட்ட இரண்டாம் வரத்தின் நினைவு வந்தது.

நடந்ததை எல்லாம் மனைவியிடம் சொன்னான் அவன். "உங்களுக்கு மட்டும் பொற்காசுகள் தெரிகின்றன. ஆனால் பிறர்க்குத் தெரிவது இல்லை. அப்படிப்பட்ட பொற்காசகளை நீங்கள் எப்படிப் பிறரிடம் தர முடியும். அதற்கு மாற்றாக எப்படிப் பொருள்களை வாங்க முடியும்.?" என்று கேட்டாள்.

அப்பொழுதுதான் அவனுக்கு தான் கேட்ட இரண்டாம் வரம் எவ்வளவு தவறானது என்று புரிந்தது. கிடைத்த விலை உயர்ந்த பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலையையும் உணர்ந்தான். வருத்தம் அடைந்த அவன் அந்த வண்டியை ஓட்டிக்கொண்டு மீண்டும் காட்டிற்குச் சென்றான். வண்டியில் இருந்த பொற்காசு களையும் நகைகளையும் மந்திரக் கிணற்றுக்குள் எறிந்தான். "மந்திரக் கிணறே! நீ கொடுத்த பொருள்கள் எதுவும் வேண்டாம். நான் போட்ட இரண்டு பொற்காசுகளைத் திருப்பித் தந்துவிடு" என்று கெஞ்சினான் அவன்.

"என்னால் இரண்டு வரங்களைத்தான் தர முடியும். நீ முன்னரே அவற்றைப் பெற்று விட்டாய். இனி உனக்கு என்னால் எந்த உதவியும் செய்யமுடியாது" என்று கிணற்றுக்குள் இருந்து குரல் வந்தது. ஏமாற்றம் அடைந்த அவன் வருத்தத்துடன் வீடு திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித வினாவிடைப் போட்டி


01. 1,1,2,3,5,............. என்ற தொடரின் அடுத்த உறுப்பு யாது?

02. $\frac{X}{2} + 10$ இலிருந்து $\frac{X+10}{2}$ ஐக் கழிக்க?

03. 5 0 0 0 0 0 0 0 [ ] என்ற எண் 9 ஆல் வகுபடுமெனின் கூட்டினுள் வரவேண்டிய இலக்கம் எது?

04. (-13) - [ ] = (-6) எனின் வெற்றுக் கூட்டை நிரப்புக?

05. எத்திண்மத்தின் வலை அருகில் காட்டப் பட்டுள்ளது?



06. 24 59 என்பதைக் கிட்டிய நூறிற்கு மட்டந் தட்டுக?

07. பெறுமானம் காண்க?

$$[(3^2)^2]^2$$

08. $\sqrt{7225}$ இன் பெறுமானம் யாது?

09. 4, 6 என்பவற்றால் வகுக்கப்படும் போது 1ஐ மீதியாகத் தரும் மிகச் சிறிய எண் யாது?

10. வித்தியாசமான பொருள் யாது?

கூம்பு, கோளம், வட்டம், உருளை, கனவுரு


11. 8 9 8 5 என்ற எண்ணிலுள்ள இரு எட்டுக்களினதும் பெறுமானங் களின் வித்தியாசம் எவ்வளவு?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 6 ஆல் வகுபடும் பெரிய நாலிலக்க எண் எது?

13. உருவில் உள்ள சதுரங்கள் எத்தனை?



14. மனிதக் கணனி என அழைக்கப்பட்ட இந்தியக் கணித மேதை யார்?




இங்குள்ள 12 கேடயங்களில் இரண்டு கேடயங்கள் மட்டும் ஒரே மாதிரியானவை? அவை எவை?

**35 ஆம் பக்க வினாக்களுக்கான விடைகள்**

| | | |
|---|---|---|
| 01. 8 | 06.2500 | 11. 7920 |
| 02. 5 | 07. 6561 | 12. 9995 |
| 03. 4 | 08. 85 | 13. 14 |
| 04. (-7) | 09.13 | 14. சனுந்தலா |
| 05. சதுரக் கூம்பகம் | 10. வட்டம் | தேவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றலாம்!
## தண்டனை இல்லை!

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அறிவில் தனக்கு இணை யாரும் இல்லை என்ற ஆணவம் கொண்டிருந்தான் அவன். வழக்கம் போல அமைச்சருடன் உரையாடிக் கொண்டிருந்தான் அவன். "அமைச்சரே! இந்த நாட்டி லேயே அறிவில் சிறந்தவராக யாரைக் கருதுகிறீர்கள்?" என்று கேட்டான்.

தன்னைத்தான் அமைச்சன் சொல்வான் என்று நினைத்தான் அவன். "அரசே! நம் நாட்டில் இளமாறன் என்ற நெசவாளி இருக்கிறான். எப்படிப்பட்டவரையும் தன் அறிவுக் கூர்மையால் அவன் ஏமாற்றி விடுவான். அறிவில் சிறந்தவனாக அவனையே நான் நினைக்கிறேன்" என்றான் அமைச்சன்.



கடுப்பு அடைந்த அரசன், "இளமாறனை உடனே அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்" என்று வீரர்களுக்குக் கட்டளை இட்டான். வீரர்களுடன் அங்கு வந்தான் இளமாறன். அரசரைப் பணிவாக வணங்கினான். அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிச்சலுடன் பார்த்த அரசன், "சிறந்த அறியுடையவன் என்று எல்லோரும் உன்னைப் பாராட்டுகிறார்களே. உண்மையா?" என்று கேட்டான்.

"அரசே!நான் ஏழை நெசவாளி. சிறந்த அறிவுள்ளவனாக நான் எப்படி விளங்க முடியும்?" என்று கேட்டான்.

கேலிசெய்ய விரும்பிய அரசன். "நேற்று யாரையோ நீ ஏமாற்றினாய் என்று கேள்விப்பட்டேன். அது உண்மையா?" என்று கேட்டான். "அரசே! நேற்று நடந்ததை நான் அப்படியே சொல்கிறேன். நான் ஏமாற்றினேனா இல்லையா என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்."

"என்ன நடந்தது? சொல்"


"அரசே! நேற்று என் வீட்டில் உணவு ஏதும் சமைக்கவில்லை. நான் மிகுந்த பசியோடு இருந்தேன். அப்பொழுது என் நண்பன் ஒருவன் அங்கு வந்தான்.

"என் வீட்டில் விருந்து நடக்கிறது. நீ உண்ண வரவேண்டும்" என்று என்னை அழைத்தான். "வீட்டிலேயே வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டேன் விருந்திற்கு அழைத்ததற்கு நன்றி, என்னால் விருந்திற்கு வர முடியாது" என்றேன். அவனும் சென்று விட்டான்.

இப்படி நான் சொன்னதை மற்றவர்களை ஏமாற்றியதாக நீங்கள் நினைக்கிறீர்களா? என்று கேட்டான் அவன். என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான் அரசன் பேச்சை மாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பி "உன்னை எதற்காக இங்கே வரவழைத்தேன் தெரியுமா? நான் இப்பொழுது அரியணையில் அமர்ந்து இருக்கிறேன். நீ என்ன முயற்சி வேண்டுமானாலும் செய். உன் அறிவுக் கூர்மையைப் பயன்படுத்து, என்னை இந்த அரியணையிலிருந்து வேறிடத்தில் அமர வைத்துவிடு பார்ப்போம். நானும் உன்னை அறிவாளி என்று ஒப்புக் கொள்கிறேன் என்றான். " அரசே! பெருமிதமாக அரியணையில் அமர்ந்து இருக்கிறீர்கள். இந்த நிலையில் நீங்கள் கட்டளை இட்டால் யார் தலையாக இருந்தாலும் மண்ணில் உருளும், உங்களிடம் பேச அமைச்சர்கள், படைத் தலைவர்களே அஞ்சி நிற்கிறார்கள், ஏழை நெசவாளியாகிய நான் உங்களிடம் பேசத் துணிவேனா?

உங்களை நான் ஏமாற்றத்தான் வேண்டும் என்றால் எனக்கு ஒரு உதவி செய்யுங்கள் என்ன செய்ய வேண்டும்? சொல் ! என்று ஆணவத்துடன் கேட்டான் அரசன்

அரசே! குடிமகனாகிய நான் அரியணையின் பெருமையை காப்பாற்ற வேண்டும். அதனால் அரியணையில் அமர்ந்திருக்கும் வரை உங்களை ஏமாற்ற மாட்டேன். அரியணையை விட்டு இறங்குங்கள். இங்குள்ள எதேனும் ஒரு இருக்கையில் அமருங்கள், பிறகு உங்களை நான் ஏமாற்ற முயற்சி செய்கிறேன். என் முயற்சி வெற்றி பெறுகிறதா இல்லையா என்பதைப் பார்ப்போம் என்றான் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் சொல்வது உண்மை தான். நான் அரியணையில் அமர்ந்திருக்கும் போது என்னுடன் விளையாட யாருக்குத் துணிவு வரும்? நான் வேறுஓர் இருக்கையில் அமர்ந்தால் மட்டும் இவன் என்னை ஏமாற்றி விடுவானா? அதையும் பார்த்து விடுவோம். என்று நினைத்தான் அரசன்.

அரியணையில் இருந்து இறங்கி வேறு வேறு இருக்கையில் அமர்ந்தான் அவன்.

இளமாறனே! உன் அறிவுக் கூர்மையை எல்லாம் பயன்படுத்து. என்னை இந்த இருக்கையில் இருந்து வேறு இருக்கையில் அமரவை பார்ப்போம். நீ இந்த முயற்சில் தோல்வியையே தழுவப்போகிறாய் என்று ஆணவத் துடன் சொன்னான் அவன்.

அரசே! உங்களை அரியணையில் இருந்து வேறு இடத்தில் அமரவைக்கச் சொன்னீர்கள் நான் அப்படிச் செய்து விட்டேனா இல்லையா? என்பது இப்போது உங்களுக்கே தெரியும் என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

தன் தோல்வியை ஒப்புக்கொண்ட அரசன் அவனுக்குப் பெரும் பொருள் பரிசாகத் தந்தான்.

**62 ஆம் பக்கத்திற்கான விடைகள்**

1. கடிகாரம்
2. நாட்காட்டி
3. கத்தரிக்காய்
4. பூக்கோளம்
5. தலைமுடி
6. திரைப்படம்
7. சிலந்தி
8. தூண்டில் மீனும் புழுவும்
9. பற்களும் உமிக்கரியும்
10. துப்பாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்னும் வள்ளுவன் வாக்குக்கு இலக்கணமாகப் பிறந்தவர்களுள் தாவீது அடிகளும் ஒருவராவார். இவர் 1907ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் திகதி பருத்தித்துறையிலுள்ள தும்பளை என்னும் ஊரில் பிறந்தார். இவரின் தந்தை ஆபிரகாம் பிள்ளை டேவிட் ஆவார். இவர் ஓர் ஆசிரியராகப் பணிபுரிந்தார். தாயார் எலிசபத்து என்பராவார்.

## பன்மொழிப் புலமைமிகு வியத்தகு அறிஞர்

# தாவீது அடிகள்



தாவீது அடிகள் ஆரம்பக் கல்வியை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் பயின்றார். பின்பு லண்டன் மெற்றிகுலேசன் பரீட்சையில் தேறினார். அதன் பின்பு கத்தோலிக்க மத குரு ஆவதற்கு கொழும்பு புதின பேனாட் செமினறியில் சேர்ந்து படித்துப் பயிற்சி பெற்றார். இவ்வாறு தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார்.

குருப்பட்டம் பெற்ற தாவீது அடிகள் மூன்றாண்டுகள் கொழும்பு யூனிவசிற்றிக் கல்லூரியில் பயின்று சரித்திரப் பாடத்தில் இலண்டன் பல்கலைக்கழகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கலைமாணிப் பட்டம் பெற்றதோடு முதற் பிரிவிலும் தேறினார்.

மேற்படி கல்லூரியில் பொருளாதார பாடத்தில் தங்கப் பதங்கமும் பெற்றிருந்தார். இக்கல்லூரியில் படிப்பை முடித்துக் கொண்ட தாவீது அடிகள் தான்படித்த சம்பத்திரிசியார் கல்லூரியில் ஓர் ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார். அப்போது இவரின் தந்தையும் அங்கு ஆசிரியப் பணி புரிந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரிடம் முறையாகத் தமிழ் பயின்றார். 1947ஆம் ஆண்டு முதல் அண்ணாமலை, மைசூர் பல்கலைக்கழகங்களில் மொழியாராய்ச்சியில் ஈடுபட்டார். பின்பு இலண்டன் பல்கலைக்கழகத்தில் இந்தோ ஆரிய மொழிகளில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். இவர், பல்வேறு மொழியாராய்ச்சிகளில் ஈடுபட்டார். அதனால் பன்மொழியில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி என்ற நூலை எழுதி வெளியிட்டார். 1981இல் யாழ் நூல் நிலையம் தீக்கிரையான செய்தி கேட்டு உயிர் துறந்தார் என்றால் அவரின் மொழிப்பற்றும் அறிவு வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் எமக்கு நன்கு புலனாகின்றது எனலாம்.


**திரு.த.தயானந்தன்**
**யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாசங்களைக் காண்க

இரண்டு படத்திற்கும் இடையில் 6 வித்தியாசங்கள் உள்ளது அவற்றை கண்டுபிடியுங்கள் பார்ப்போம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ காலங்கள்



சூரிய மண்டலத்தில் மிகவும்
சிறப்பியல்பு
கொண்ட ஒரே ஒரு கோள் புவி.

இப் புவியானது சூரிய மண்டலத்தில் மூன்றாவது கோளாக அமைந்துள்ளது. நிலக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம், உயிர்க்கோளம் ஆகியவற்றை ஒருங்கே கொண்டு அமைந்து காணப்படும் சிறப்பும் இப்புவிக்குண்டு. புவி தனது அச்சில் 23 1/2 பாகை சரிவாக அமைந்து மேற்கில் இருந்து கிழக்காக சுழல்கின்றதாகும்.


புவியின் இரு முக்கியமான செயற்பாடுகளாவன

1. புவிச்சுழற்சி
2. புவிச்சுற்றுகை

புவி தனது அச்சில் நின்று தன்னைத்தானே சுற்றுகின்றதை புவிச்சுழற்சி என்று கூறுவர். புவி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனை நீள் வட்டப் பாதையில் சுற்றி வருவதனை புவிச் சுற்றுகை என அழைப்பர். புவிச் சுழற்சியின் விளைவாக இரவு பகல் ஏற்படுகின்றது. புவிச்சுற்றுகையினால் பருவ காலங்கள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சூரிய உச்சமானது மார்ச் 21ஆம் திகதி - மத்திய கோட்டிற்கு நேராகவும், யூன் 21ஆம் திகதி - கடகக் கோட்டிற்க நேராகவும், செப்ரம்பர் 23ஆம் திகதி - மத்திய கோட்டிற்கு நேராகவும், டிசம்பர் 22ஆம் திகதி - மகரக் கோட்டிற்கு நேராகவும கிடைக்கின்றதாகும்.

புவிச் சுற்றுகையின் மூலம் சூரியனைச் சுற்றிவர ஒரு வருடம் எடுக்கின்றது. இவ் ஒரு வருடத்திற்குள் வட தென் அரைக் கோளங்களில் பருவமாற்றங்களை அவதானிகக் கூடியதாகவுள்ளது.

மார்ச் 21ஆம் திகதி சூரியன் மத்திய கோட்டிற்கு நேராக உச்சம் கொடுக்கும் போது முழு உலகிற்கும் இரவு பகல் சமமாகக் கிடைக்கின்றது. (சமவிராக்காலம்) இச் சந்தர்ப்பத்தில் வட அரைக்கோளத்தில் இலைதுளிர் காலம் (வசந்தம்), தென்னரைக் கோளத்தில் இலையுதிர் காலமும் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யூன் 21ஆம் திகதி சூரியன் கடகக்கோட்டிற்கு நேராக உச்சம் கொடுக்கும் போது வட அரைக் கோளத்தில் கோடை பருவமும் தென்னரைக் கோளத்தில் மாரி பருவமும் காணப்படுகின்றது.

செப்ரம்பர் 23ஆம் திகதி மீண்டும் சூரியன் மத்திய கோட்டிற்கு நேராக உச்சம் கொடுக்கும் அச்சந்தர்ப்பத்தில் உலகம் முழுவதும் இரவு பகல் (சமவிராக்காலம்) சமமாகும். இக்காலத்தில் தென்னரைக் கோளத்தில் இலைதுளிர்க் காலமும் வட அரைக் கோளத்தில் இலையுதிர் காலமும் காணப்படும்.





டிசம்பர் 22ஆந் திகதி சூரிய உச்சம் மகரக் கோட்டிற்கு நேராக கிடைக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் தென்னரைக் கோளத்தில் கோடை காலமும் வட அரைக் கோளத்தில் மாரி காலமும் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூன் 21ஆம் திகதி சூரியன் மத்திய கோட்டிற்கு வடக்கே உச்சம் கொடுப்பதனை கோடைச் சூரிய கண நிலை நேரம் எனவும் டிசம்பர் 22ஆம் திகதி சூரியன் தெற்கே மகரக் கோட்டில் உச்சம் கொடுப்பதனை மாரிச் சூரிய கணநிலை நேரம் எனவும் அழைப்பர்.




கடகக்கோட்டில் சூரியன் உச்சம் கொடுத்தல்

மகரக்கோட்டில் சூரியன் உச்சம் கொடுத்தல்

கடகக் கோட்டிற்கு நேராக சூரிய உச்சம் கிடைக்கப் பெறும் போது வட அரைக் கோளத்திற்கு நீண்ட பகலும் - குறுகிய இரவும் தென்னரைக் கோளத்திற்கு குறுகிய பகலும் நீண்ட இரவும் கிடைக்கும். மகரக் கோட்டிற்கு நேராக சூரியன் உச்சம் கிடைக்கப் பெறும் போது தென்அரைக் கோளத்திற்கு நீண்ட பகலும் குறுகிய இரவும் வட அரைக்கோளத்திற்கு குறுகிய பகலும் நீண்ட இரவும் கிடைக்கும்


திருமதி.மீ.உதயகுமாரன்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**அடுத்த இதழில் பெறுமதியான பரிசில்களுடன் புதுமையான கட்டுரைப் போட்டி ஆரம்பமாகிறது வாங்கத் தவறாதீர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Say when it was Invented






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை என்பது வண்ணான் கழுதை



"வாழ்க்கை என்பது வண்ணான் கழுதை" இந்தி மொழியில் இப்படியொரு பழமொழி இருக்கிறது.

வண்ணான் கழுதை வீட்டில் இருந்து அழுக்குத் துணியைக் கொண்டு போகும் ஆற்றில் இருந்து வெளுத்த துணியைக் கொண்டு போகும் ஒரு இடத்தில் நிற்காது இரு கரைக்கும் போய்வரும்.

வாழ்க்கையும் இப்படித்தான் ஒரு இடத்தில் தேங்கி நிற்காது செயற்பட்டுக் கொண்டேயிருக்கும் இதனால் அப்பழமொழி வழங்கப்படுகிறது. அச்செயற்பாட்டில் அழுக்குத் துணி வெளுத்த துணி என்ற இரு சுமை இருக்கும். கழுதைக்கு இரண்டும் சுமைதான் அதற்கு அழுக்குக்கும் வெளுப்புக்கும், வித்தியாசம் தெரியாது. எம்மில் பலர் இருப்பது கழுதையின் நிலையில், வாழ்க்கை என்பது அவர்களுக்குச் சுமைதான். சிலருக்கு சுமையாகப் பல்பொழுதுகளும் சுகமான சுமையாகச் சில பொழுதுகளும் இருக்கும். சிலருக்கு எந்தச் சுமையை வைத்தாலும், சுகமான சுமையாகவே வாழ்க்கை இருக்கும். ஏன் இந்த வேறுபாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை இரு கரைக்குள் ஓடும் ஒரு நதி. ஒரு பக்கத்தை மட்டும் நாம் விரும்ப முடியாது. இரண்டு பக்கங்களையும் விரும்ப வேண்டும். ஒரு கரையை கொண்ட நதி இருக்க முடியாது. வாழ்க்கையும் அப்படித்தான் நமக்கு விரும்பிய பக்கத்தை - சுமையைத் தேர்ந்தெடுத்து முடியாது. நல்லது என்றால் மறுபக்கம் கெட்டது. கெட்டது என்றால் மறுபக்கம் நல்லது. ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது. தவிர்க்கவும் முடியாது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது வந்து போகும். சகடக்கால் போல, இது புரிந்தால் வாழ்க்கை சுகமான சுமையாகும்.

ஒரு பக்கம் - அதுவும் நல்ல பக்கம் வேண்டும் எனில் சகடத்தை - வண்டியை நிறுத்தி வைக்க வேண்டும். ஓட விடக்கூடாது விட்டால் சகடக்கால் - வண்டியை சுற்றும் நாம் விரும்பிய இடத்தில் விரும்பிய பக்கத்தைக் காட்டி நிற்காது. இது சாத்தியப்படாது. வாழ்க்கை வண்டி ஓடிக்கொண்டிருந்தால்தான் அழகு. நின்றுவிட்டால் அதில் இல்லை மகிழ்வு. ஓடுவதால்தான் ஆற்றை ரசிக்கின்றோம் தேங்கி நின்றுவிட்டால் மூக்கைப் பொத்தி வேறுபக்கம் திரும்பி ஆறென்று பேர் படைத்தாய் எனினும் இப்படி நாறவாய் என்று நாம் நினைக்கவில்லை ஐயோ! என்ன கொடுமை என்போம்.

பலர் விரும்புவது நல்ல பக்கத்தை மட்டுமே இதனால் விருப்பப் படி நடக்கும் போது குதிப்பர். மறுபக்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் வரும் போது திகைப்பர். இவர்கள் வாழ்க்கை வண்டியைத் செலுத்தத் தெரியாத மனிதர்கள். வாழ்க்கை என்ற வண்டி ஓட்டுவதற்காகத் தரப்பட்டுள்ளது எமக்கு. பலர் அதனை அப்படியே நிறுத்தி வைத்துப் பேண நினைக்கிறார்கள். சிலர் சந்தோஷமாக அதை ஓட்டிச் செல்கின்றனர். வண்டியென்றால் நிறுத்தி வைத்தாலும் ஓட்டிச் சென்றாலும் காலத்தால் தேய்வது நிச்சயம். ஓடாமல் தேய்வதிலும் ஓடித் தேய்வது சிறந்ததல்லவா? ஓடினாலும் விபத்துவரும் எனப் பயந்தால் எப்படி ஓடுவது?

உலகத்தில் உள்ள எல்லாம் கெட்டது என நினைப்பதும் உலகத்தில் உள்ள எல்லாம் நல்லது என நினைப்பதும் இயல்பான சிந்தனை அல்ல உலகம் என்பது இரண்டும் கலந்தது என்று நினைப்பதே இயல்பு. எல்லாம் கெட்டது என்று நினைப்பவனும் வாழமுடியாது எல்லாம் நல்லது என நினைப்பவனும் வாழ முடியாது. இரண்டும் இருக்கும் என்ற சிந்தனைப் பாங்கு உள்ளவனே வாழ முடியும்.

வாழ்க்கை இப்படித்தான் - இன்பம், துன்பம் இரண்டும் இருக்கும் என்று என்னுபவனே வாழ்க்கையை எதிர்கொள்ளமுடியும். வாழ்க்கை என்பது இன்பமய மானது மட்டுமே என நினைத்து வாழ்பவர் துன்பம் வரும் போது துவண்டு வீழ்வர். தாம் நினைக்காத ஒன்று நடப்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ளமுடிவதில்லை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பமடைந்து விடுகின்றனர். வாழ்க்கை என்பது கெட்டது என நினைப்பவர் நிலையும் இப்படித்தான் சந்தோஷங்களை அனுபவிக்க முடியாது விரக்தியுடன் காலங்கழிப்பர். சிலர் எதிர்கொள்ளத் துணிவின்றி வாழ்வைத் துறந்தே வெளியேறிவிடுவர்.

முழுவதும் கெட்டது முழுவதும் நல்லது என்ற எண்ணங்கள் அதீத நம்பிக்கைகள் இவை வாழ்க்கைக்கு உதவாது. நல்லதும் கெட்டதும் இணைந்ததே வாழ்கை என்று உணர்ந்து ஏற்றுக் கொண்டு இயல்பாக வாழ்வதுதான் வாழ்க்கையை இனிப்புள்ளதாக்கும். நீங்கள் எந்தரகம் அதீதமானவரா? இயல்பானவரா? தீர்மானம் உங்களது.

அதீதமானவராக இருந்தால் மாறத் தெண்டியுங்கள், இயல்பானவராக இருந்தால் வாழ்க்கையை வாழுங்கள் சந்தோஷமாக வாழ்த்துக்ங்கள்.

திரு.நா.நவராஜ்
உளவளத் துணையாளர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழைத்தேச ஓவியர்கள்



இலங்கையில் சிறந்த ஓவியர்களான

1. ஜே.டி.ஏ.பெரேரா
2. ஜோர்ஜ் கித்
3. அமர சேகர முதலியார்
4. எல்.ட.பி.மஞ்சுஸ்ரீ
5. சோளியஸ் மெண்டிஸ்
6. டபிள்யூ.ஜே.ஜீ.பீலின்
7. எம் சார்லிஸ்
8. டேவிட் பெயின்ரர்
9. ஸ்டான்லி அபேசிங்க
10. எவ்.ஏ.கருணாரத்ன
11. ரிச்சாட் கப்பிரியால்
12. ஜலன் பீரிஸ்
13. ஜஸ்டின் தரனியகல
14. சேனக சேனநாயக்கா
15. திலக அபேசிங்க
16. ஜீ.எஸ்.பர்ணாந்து
17. ஹரிபீரீஸ்

மேலைத்தேய ஓவியர்கள்

உலகப் புகழ் பெற்ற ஓவியர்களான

1. பப்லோ பிக்காசோ (1881 - 1973)
2. ஜோர்ஜ் பிறேக் (1882 - 1963)
3. போல் செசான் (1829 - 1906)
4. வின்சன்ற் லான்கோ (1853 - 1890)
5. பிரான்சிஸ்கோ டி.கோயா (1746 - 1828)
6. ஸர்பீட்டர்பால் ரூண்ஸ் (1577 - 1640)
7. ரிட்டான் (1481 - 1576)
8. எல்திரிகோ (1591 - 1641)
9. போல்கொகான் (1848 - 1903)
10. சால்வடோல் டாலி (1904 - 1988)
11. ரெம்பராண்ட் (1606 - 1669)
12. ஹென்றிமூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கீழைத்தேய மேலைத்தேய ஓவியர்கள் பொதுவாக தமது வாழ்வியல் வெளிப்பாட்டை அடிப்படையாக வைத்துக் கொண்டே ஓவியங்களை வரைந்து வர்ணம் தீட்டியுள்ளனர். இவைகளில் சில யதார்த்தமாகவும் சில நவீனம் கொண்டதாகவும் வேறு சில இரண்டும் கலந்து படைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய ஓவியர்களின் பெயர்கள் மட்டும் அல்லாது தனித்தனியாக அவர்களின் குறிப்புக்களும் படைப்புக்களும் தொடரும் சஞ்சிகைகளில் பதிவாகும்.

1. ஜே.டீ.ஏ.பெரேரா (கீழைத்தேய ஓவியர்)

இவர் அரச நுண்கலைக் கல்லூரி அமைப்பதற்கு முன்னோடியாகச் செயற்பட்டவர் பின்னர் அதன் அதிபராகவும் இருந்தார். உருவகச் சித்திரக் கலையில் சிறந்து விளங்கியவர் இங்கிலாந்தின் றோயல் அக்கடமி உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

2. ஜோர்ஜ் பிறேக் (1882 - 1963) (மேலைத்தேய ஓவியர்)

இவர் பிக்காசோகவுடன் சேர்ந்து செசானின் கியூபிச் முறையை வளர்த்தவராவர், பாரிஸில் ஹமபாட் அக்கடமியில் ஓவியம் பயின்றார். 1907இல் போலிச பாணியில் ஓவியம் வரைய ஆரம்பித்தார் கியூபிசத்தில் புள்ளிகள் மூலம் ஓவியம் வரையும் முறையைப் புகுத்தினார்.

வயலினும் கூசாவும், கடற்கரையில் குளிக்கும் காட்சி, பறவைகள், நோக்மண்டித் துறைமுகம் போன்றன இவரின் சிறந்த ஆக்கங்களுட் சிலவாகும்.

திரு.ம.டொமினிக் ஜீவா

யாழ் / சென் சாள்ஸ் மகாவித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி உலகின் ராஜகிரீடம் !!





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Sentence Making - 2*

Hi ! In this segment we can learn how to use **Adverb of manner** in a sentence. Adverbs of manner are words that describe how the (verb) action is done.

Read the story below and try to understand what the underlined words do (say).

-SS.Janagan-



### A Surprise for Pria



A boy knocked on the door. Pria ran to open it. The boy handed her a small parcel and ran off. The parcel was for Pria. "Open it. Open it!" *John said* ***excitedly***.

"I wonder who sent it," said Pria "let's guess what it is. A lady's watch?"

"I don't think so. There are holes around it," said John "I think it's a big fat worm." He laughed.

Pria cut the string. *She unwrapped the parcel* ***quickly***. She found abox.



"Come on *Pria open the box* ***quickly***." said John.




"Don't be impatient, John." Pria said.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*She opened the box* ***carefully***.



There was a squeak and a mouse jumped out of it. Pria screamed and dropped the box. John laughed.



Just then the cat came into the room. It pounced on the mouse and ate it up. John stopped laughing.

"My mouse, my pet!" *he cried* ***loudly***.



Think of the following sentences. ( கீழுள்ள வசனங்களை அவதானியுங்கள்.)

பிரியா பொதியை *(parcel)* பிரித்தாள். என்ற வசனம் கீழுள்ளவாறு எழுதப்படும்.

| Subject | Verb | Object *(what?)*. |
|---|---|---|
| Pria | unwrapped | the parcel. |

இனி வினை *(Verb)* எவ்வாறு *(How?)* நடந்தது என்பதை நீங்கள் கூற விரும்பும்போது Adverb of manner பயன்படுத்தப்படுகிறது.

பிரியா பொதியை விரைவாக பிரித்தாள்.

| Subject | Verb | *what?* | ***How?*** | *Where?* | *When?* |
|---|---|---|---|---|---|
| Pria | unwrapped | the parcel | **quickly**. | | |

பொதுவாக *Adverb of manner* ஆனது *Object* இனை அடுத்து வரும் *How* என்ற வினாவுக்கு விடையாக அமையும். ஆனால் *Object* இல்லாதவிடத்து *Verb* இனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து உடனடியாக எழுதப்படும்.

இவ்வாறே ஏனைய வசனங்களில் உள்ள *Adverbs of manner* ஐ அவதானியுங்கள்.



அவள் பெட்டியை <u>கவனமாகத்</u> திறந்தாள்.

She opened the box **<u>carefully</u>**. --- ( 1 )



அவன் <u>சத்தமாக</u> அழுதான்.

He cried **<u>loudly</u>**. --- ( 2 )

மேலே வசனம் (1) இல் *Adverb of manner* ஆனது *Object* இனைத் தொடர்ந்தும் வசனம் (2) இல் *Object* இல்லாத காரணத்தினால் *Verb* இனைத் தொடர்ந்தும் எழுதப்படுகின்றது.

பெரும்பாலும் இந்த *Adverb of manner* ஆனது *Adjective* உடன் *ly* சேர்த்து எழுதுவதன் மூலம் பெறப்படும்.

<u>Here are some Adverbs of manner. Try to make sentences using these adverbs of manner.</u>

☞

| | | |
|---|---|---|
| bravely | slowly | silently |
| beautifully | quietly | lightly |
| neatly | angrily | clearly |
| roughly | loudly | noisily |

**<u>Activity 01.</u>** *<u>Say where you will put the adverb of manner in the following.</u>*


1. He does his work at school. (*carefully*)
   He does his work *<u>carefully</u>* at school.
2. Raja reads the text in the classroom. (*carefully*)
3. She sings songs at school. (*beautifully*)
4. She sings at school. (*beautifully*)
5. We can not see in the dark. (*clearly*)
6. We can not see anything in the dark. (*clearly*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Activity 02.** *Put the correct adverb of manner in the blanks.*

**quietly carefully quickly loudly neatly**




**Activity 03.** *Here is a story of a thief and a child and how they did things. Put suitable adverb of manner in the sentences.*




1. A thief entered the house.
2. He opened the door.
3. He opened a drawer.
4. He took out all the money.
5. The baby woke up.
6. It began to cry.
7. The thief was frightened.
8. He opened a window.
9. He ran away.
10. He forgot to take the money.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தை விளையாட்டு 04 இல்
## பரிசு பெற்ற அதிஷ்டசாலிகள் விபரம்

1. கஜகரன் மனோகரன் தரம் -9 B

   யா/ இந்துக் கல்லூரி

2. டிலக்ஷி பேனாட் றஞ்சித் - தரம் 7

   யா/ உடுவில் மகளிர் கல்லூரி

3. வி.கார்த்திகன் - தரம் 9 A

   யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

4. பிரசோதிகா குலேந்திரன் - தரம் 9 C

   யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

5. ஸ்ரீ. திலக்ஷன் - தரம் 7 A

   யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி

6. நா.நவலக்ஷன் - தரம் 5 A

   யா/ மத்திய கல்லூரி

7. சந்திரகுமார் பிருந்தா - தரம் 7 A

   யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி

8. மேனகா பாலச்சந்திரன் - தரம் 8 A

   யா/ உடுவில் மகளிர் கல்லூரி

9. அ.விமோசனன் - தரம் 8 A

   யா/இந்துக் கல்லூரி

10. வி.விஷ்ணுகா - தரம் 8 G

    யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1. முகத்தின் மேலே கைகள்
முள்ளைப் போலே கைகள்
ஓடிப்போகும் ஒரு கை தான்
மெல்ல நகரும் மற்றொரு கை!
- இது என்ன?

2. அடித்து வைத்த இடத்தில்
ஆடாமல் அசையாமல் இருக்கும்
அனுதினம் பார்க்கப் பார்க்க
ஆயுள்நாளைக் குறைக்கும்
அது என்ன?

3. தலையிலே கிரீடமுண்டு அரசன் அல்ல
தளதளக்கும் மேனியுண்டு குமரி அல்ல
வீதிக்கு வருவதுண்டு விலையுமுண்டு
விரும்புகிற பலபேர்கள் உலகில் உண்டு! - அது என்ன?

4. வாசலில் வண்ணப் பூ
வரிவரியாய் அழகுப் பூ
தினந்தினமும் வேறு பூ
தெளிவாகத் தோன்றும் - என்ன பூ?

5. சுருட்ட முடியும் ஒடிக்க முடியாது!
எடுக்க எடுக்க வளரும்
எண்ணெய் கண்டால் படியும்
- அது என்ன?

6. விதவிதமாய்க் கதை சொல்லும்
வேடிக்கைகள் பல காட்டும்
வேடமிடும் பலர் அங்கே
வித விதமாய் மாறிடுவார்! - அது என்ன?

7. வாய் வழியாய் நூல் எடுப்பான் வித்தைக் காரனல்ல
வலைவிரித்து வாழ்ந்திடுவான் வேடனல்ல
வகைவகையாய் உயிர்குடிப்பான் எமனுமல்ல - அது என்ன?


8. வாய்க்கால் கரையோரம்
வகை வகையாய் ஆட்களங்கே
செத்துப் போனவனைக் காட்டிச்
சாகப் போகிறவனைப் பிடிக்கின்றார்! - அது என்ன?

9. வெள்ளை மாடு கறுப்பு மாடு
இரண்டையும் குளிப்பாட்டக் கொண்டு போனான்
தேய்த்துக் குளிப்பாட்டி நீரோடு
விட்டு வந்தான் கறுப்பு மாட்டை
வெள்ளை மாடு மிச்சம்! அவை என்ன?


10. பக்குவமாய்ப் பகைவரையே கொன்று வீழ்த்தும்
தக்கபடி வனவிலங்கை வேட்டை செய்யும்
தனி வழிக்குத் துணையாகும் காவலாகும்
தப்பின்றி இதன் பெயரைக் கூறுவீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இங்குள்ள 6 சேவல்களுள் ஒரு சேவல் மட்டும் வித்தியாசமானது.
அது எது? எப்படி அது வித்தியாசப்படுகிறது?




AB புள்ளிகளையும் CD புள்ளிகளையும் நேர்கோடுகளால் இணைத்தால், அந்த இரண்டு கோடுகளும் எந்தப் புள்ளியில் வெட்டிக் கொள்ளும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான வார்த்தை விளையாட்டு -06

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | | ■ |
| ■ | | ■ | | ■ | | |
| | | | | 6 | ■ | |
| ■ | | ■ | | ■ | 7 | |
| 8 | ■ | 9 அ | | 10 | | ■ |
| 11 | | ய் | ■ | | ■ | |
| | ■ | யா | | | | 12 |

| | |
|---|---|
| பழக்கம் | மணி |
| தோடு | ஆஸ்திரியா |
| தோகை | பிரதி |
| தேசாய் | திட்டு |
| தாமிரபரணி | சுதேசி |
| மதி | மிஸோரம் |
| அய்யா | ஆலை |
| அம்பிகை | சக்கரம் |

**மாணவர்களே!**

உங்கள் புத்திக்கூர்மையை பிரயோகித்து தரப்பட்ட சொற்களில் இருந்து, இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை தெரிந்தெடுத்து நிரப்பி 20–06–2007ஆம் திகதிக்கு முன்பாக எமக்கு அனுப்பி வையுங்கள். வெற்றி பெறும் முதல் பத்து அதிர்ஸ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

பாக்யா காகிதாதிகள், இல.121, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.

### வார்த்தை விளையாட்டு விண்ணப்பப் படிவம்

பெயர் : ..........................................................

வகுப்பு : .............................. பிரிவு: ..............

பாடசாலை : ..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி

# சிசு உதான

சிறந்த எதிர்கால சந்ததியினருக்கான

"சிசு உதான"
சேமிப்புக் கணக்கின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

- உங்கள் சேமிப்புக்களுக்கு அதிகூடிய வட்டி.
முதல் முறையில் க.பொ.த. சாதாரண தர மற்றும்
- உயர் தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் அதி விசேட சித்தி பெறும் மாணவர்களுக்கு விசேட பணப் பரிசுகள்.
- சேமிப்புத் தொகை அதிகரிப்புக்கேற்ப கவர்ச்சிகரமான பரிசுகள்.



## கணக்குகளுக்கான பரிசுப் பொருட்கள் விபரம்

| கணக்கு மீதி | பரிசில்கள் |
|---|---|
| 1,000/= | சிசு உதான தொப்பி |
| 5,000/= | சிசு உதான பை ( Bag ) |
| 10,000/= | அடிமட்டத்துடனான கணிப்பொறி |
| 25,000/= | ஆங்கில அகராதி |
| 50,000/= | கணிப்பொறி (பெரியது) |
| 100,000/= | கைக்கடிகாரம் |
| 250,000/= | கணக்கு உரிமையாளர் தெரிவு செய்யும் 5,000/- பெறுமதியான பரிசுப்பொருள் |
| 500,000/= | 8,500/- பெறுமதியான துவிச்சக்கர வண்டி அல்லது கையடக்கத்தொலைபேசி |

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org